# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
**C.C.No.33/2021 P.W .8**

| | | | |
|---|---|---|---|
| Name: ஸ்ரீதரன் | Father's Name | : சாமன்னா | |
| Village: | Taluk | : | |
| Age : | Occupation | : | |
| Caste : | Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2023

1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

---------------------------------------------------------------------------------------------------

**<u>21.07.2023:</u> முதல் விசாரணை:**

1) நான் பர்மா காலனியில் வசிக்கிறேன். நான் வியாபாரம் செய்கிறேன். 15 வருடங்களுக்கு முன்பு காரைக்குடி பள்ளிவாசல் வழியே வந்தபோது, காரைக்குடி குற்றப்பிரிவு போலீசார் சம்பவஇடத்தில் உள்ள வீட்டில் திருடு போன விவரம் குறித்து சம்பவத்தைப் பார்வையிட்டு, விசாரணை செய்து சம்பவ இடத்தில் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.11**) ஆகும். போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கையெழுத்திட்ட பேப்பரில் என்னென்ன விவரங்கள் எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)
விரைவுநீதிபதி, காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C.No.33/2021 P.W .9**

Name: ரவிக்குமார் Father's Name : ராமநாதன்
Village: Taluk :
Age : Occupation :
Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2023
1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

---

**<u>21.07.2023:</u> முதல் விசாரணை:**

1) நான் பர்மா காலனியில் வசிக்கிறேன். நான் வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு குறித்து எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். யார்வீட்டில் நகைகள் திருடுபோனது என்ற விவரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வழக்கின் கூடுதல் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.12 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சி மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.13 ஆகும்.

**<u>அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டார். அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் 07.09.2007அன்று மதியம் 2.30 மணியளவில் பள்ளத்தூர்காவல்நிலையத்திற்கு சென்றபோது, பள்ளத்தூர் போலீசார், வழக்கின் எதிரி மற்றொரு எதிரியை பிடித்து விசாரணை செய்தபோது, எவ்வித தூண்டுதலுமின்றி தன்னிச்சையாக எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அன்றைய தினம் 18.30 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கின் சொத்தை கைப்பற்றிய அத்தாட்சி மகஜரில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு, தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு கு.வி.</u> - இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா, B.Sc.,B.L.,(Hon's)
விரைவுநீதிபதி, காரைக்குடி.